# சங்கராச்சாரியார் கைது ஆவாரா?

## குழந்தைகளைப் பாதிக்கும் தொலைக்காட்சி

## தமிழர்களைப் பற்றி மார்க்ஸ்



மாத இதழ்
80 காசு
மே '89
67

# சுட்டு

FREE E - BOOKS , www.thamizham.net.,



# வாசகர் எதிரொலி

O பிளவுபட்ட அ. தி. மு. க வினர் பரஸ்பரம் மற்றவர்களின் அந்தரங்கங்களை அரங்கேற்றுவது மாதிரி இருந்தது கோலி, ராஜேஷ்குமார் மோதல், அங்கே அறிவியல் விந்தையால் தொலைக்காட்சி மாயாஜாலம் நிகழ்த்துகிறது. இங்கே... அரசியல் விந்தையால் ஆளும் கட்சியின் எடுபிடியாகவல்லவா செயல்படுகிறது.

— லேனா வாணன், ஐதராபாத்

O சிம்மக்குரலோனின் பச்சோந்தித் தனத்திற்குச் சரியான சாட்டையடி சுட்டியின் நான்கு கேள்விகள். பூலே! சுட்டி. வளர்க உன் பொன்னான பணி.

— வித்யகலா, அம்பத்தூர்

O பெண்ணுரிமையைப் பற்றி வாய்கிழியப் பேசுவோர் கூட இது வரைத் தன்னைப் பெற்ற பெண்ணின் பெயரையும் தன் பெயருக்கு முன்னால் வைத்துக் கொள்வது பற்றி இன்னும் சிந்திக்கவில்லை என்று நீங்கள் எழுதியதைக் கடுமையாக எதிர்க்கிறேன். பள்ளியில் பிள்ளைகள், சேர்க்கும் விண்ணப்பப் படிரத்தில் தாயின் பெயரே கேட்கப்பட வேண்டும் என்று பெரியார் அவர்கள் போராடி உள்ளார். சமீபத்தில் கூட புதுடில்லியில் "பாரதிய பதிதா உத்தர் சபா" என்ற இயக்கம் அவர்களிடம் உறுப்பினராக உள்ள 70 லட்சம் பெண்மணிகளின் குழந்தைகளுக்குத் தங்களது பெயரே பள்ளி விண்ணப்பாரத்தில் இடம் பெற வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து வெற்றியும் கண்டனர்.

— ப. இராமமுருகன், சிவகங்கை

O நட்சத்திரங்களின் திரைக் கவர்ச்சியை - நடிப்பு வேஷத்தை நம்பி, நாட்டின் ஆட்சிப் பொறுப்பையே அளித்த நம்மவர்களின் முட்டாள் தனத்தை விட கே. ஆர் விஜயாவை தெய்வீகப் பிறவியாக நம்பிய மலேசியப் பெண்ணின் நம்பிக்கை குற்றமுடையதல்ல

— எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

O இன்றைக்கு முன்னணி அரசியல் வாதிகளாக மேடையேறும் ஒவ்வொரு அரசியல் வா(வியா)தியிடமும், நடுநிலை உணர்வுள்ள அனைவரின் கேள்வியையே "சுட்டி" நறுக்கென கேட்டு வருகிறது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானாலும் "சுட்டி"யின் கேள்விக்குத் தலை குனிந்தே நிற்க வேண்டும். ஏனென்றால் உண்மை சுடும்.

— மு. மகாலிங்கம், சாத்தன்குளம்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# மூப்பனாரிடம் நான்கு கேள்விகள்

1) மக்கள் தமிழகத்தில் மறந்து போன காங்கிரசுக்குப் புது விளம்பரமாக மறைமலைநகர் காங்கிரஸ் மாநாடும் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிர கமும் நடத்தும் நீங்கள், உங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் இப்போதுள்ள பிரச்சினைகளை எப்படித் தீர்க்கப் போகிறீர்கள் என்று மட்டும் ஏன் இது வரை அறிவிக்கவில்லை? உங்கள் செயல் முறை யில் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது ஏதாவது புதிய மாற்றம் உண்டா?

2) சோஷலிசம் பேசும் காங்கிரஸின் புதிய தலைவ ராகிய தஞ்சை 1000 வேலி நிலச்சுவான் கபிஸ்தலம் மூப்பனார் அவர்களே! நில உச்சவரம்பு சட்டம் வரப்போகிறது என்று தெரிந்தும், என் நிலங்களை விற்றேன்' என்று ஒப்புக்கொள்ளும் நீங்கள் (ஆங்கில வார இதழொன்றில் பேட்டி : 11-1-87) 3000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை 1956-இல் விற்கப்பட்டதாக பத்திரம் எழுதி, பினாமிகள் பெயருக்கு மாற்றியது உண்மைதானே? பினாமிநில ஒழிப்புச் சட்டத்தை மாநில அரசு கொண்டுவந்த போது டெல்லியில் நீங்கள் தலையிட்டு அதனை முடக்கியதும் உண்மைதானே? அப்படியாயின் காங்கிரசின் உயிர்க் கொள்கையான சோஷலிசத் தை நீங்கள் எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள்? ஓரங்குள நிலங்கூட இல்லாத ஏழை மக்களுக்கு உங்கள் மேல் எப்படி நம்பிக்கை வரப்போகிறது?

3) காமராஜருக்குப்பிறகு நீங்கள் தமிழகத்தில் தலைமை ஏற்பதற்கு துணை நின்றவர் சிவாஜிகணேசன். தனது ரசிகர் மன்றத்தை, காங்கிரஸ் தொண்டர் படையாக மாற்றி, காங்கிரஸ் முதுகெலும்பாக முட்டுக்கொடுத்ததை மறந்து, இப்போது அவரை உங்கள் தவறான அணுகு முறையால் இழந்துவிட்டீர்கள். சிவாஜியும் அவரது ரசிகர் களும் இல்லாத சூழலைக் காங்கிரசுக்கு ஏற்படுத்தியிருக்கும் நீங்கள் புதிதாக யார் பலத்தை நம்பி காங்கிரசை வளர்க்கப் போகிறீர்கள்? ஒடிந்துபோன கத்திகளையும், நொண்டிக் குதிரைகளையும் வைத் துக்கொண்டு போருக்குப் புறப்படும் கோமாளி ராஜா என்று உங்களை எதிர்க்கட்சியினர் விமர்சிப்பது தவறா?


4) அரசியலில் சினிமாக்காரர்கள் நுழைந்து செல் வாக்குப் பெறுவதை (சீ சீ இந்தப்பழம் புளிக்கும் என்று) வெறுக்கும் நீங்கள், நடிகை தீபா கட்சி யில் சேரவும், பிரச்சாரம் செய்யவும் எப்படி அனு மதித்தீர்கள்? இப்போது நடிகை ஸ்ரீதேவியை கட்சியில் சேர்க்க நீங்கள் முயன்று வருவதாகக் கேள்விப்படுவது உண்மையா? நடிகர் கமலுக்குத் தேசிய விருது கொடுத்ததே அவரைக் கட்சியில் நீங்கள் அழைக்கத் தந்த சன்மானம் என்று சொல் லப்படுவது பொய்யா?

[அடுத்து : ஜானகி]

—எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தாய்வான்




சீனப் பெருநாட்டின் ஒரு பகுதியே தாய்வான். இதற்கு "அழகு" என்ற பொருளில் போர்த்துகீசியர்கள் வைத்த பெயர் பார்மோசா தீவு 1949 இல் சீனப்புரட்சி வெற்றி பெற்றபோது, கம்யூனிச அரசுக்கு எதிராக நின்ற சீனத்தலைவர் சியாங்கேஷேக்கும் அவருடன் 20 லட்சம் பேர்களும் தாய்வான் தீவுக்கு ஓடிப்போனார்கள்.

சீனத்தின் உண்மையான அரசு தங்களுடையதே என்று சியாங்கே ஷேக்கின் ஆட்கள் தாய்வானிலிருந்து பிரகடனம் செய்தார்கள். மக்கள் சீனம், தாய்வான் தனக்கே சொந்தமென்றும், தாய்வான் சீனம் தனக்கே சொந்தமென்றும் கூறுகின்றன. எனினும் தாய்வான் சீனாவின் ஒரு பகுதி என்பதை இரு சாரரும் ஒப்புக் கொள்கின்றனர்.

சீனாவின் தாக்குதலுக்கு அஞ்சிய தாய்வானுக்கு, இராணுவ பாது காப்பளிக்க அமெரிக்க, 1955இல் ஒப்பந்தம் செய்தது. ஆனால் 1972க்கு பின் மக்கள் சீனத்துடன் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட புது உறவால் இந்த ஒப்பந்தம் மதிப்பிழந்து நிற்கிறது.

79 குட்டித் தீவுகளையும் உள்ளடக்கிய இதன் 35,931 ச.கிலோ மீட்டர்களில் 1·75 கோடி மக்கள் வாழ்கிறார்கள். உலகத்திலேயே மக்கள் நெருக்கம் மிகுந்த நாடுகளில் தாய்வானும் ஒன்று. தலைநகர் தாய்பேயில் மட்டும் நாட்டின் 12% மக்கள் வசிக்கின்றனர். இந்நாட்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரை 200 நாட்கள் கோடைக்காலம்தான். ஆனால் மிகுந்த வெப்பஅளவு சராசரி 30°செ தான். 85% மக்கள் சென்ற நூற்றுண்டுகளின் பெரும்பாலும் தென்கிழக்கு சினாவிலிருந்து குடியேறிவர்களே.


1960 வரை முழு விவசாய நாடாக இருந்த தாய்வான், பின்னர் தொழில்துறையில் தீவிர கவனம் செலுத்தி, ஆடை வகைகள், இயந்திரப்பகுதி, மின்சார சாதனங்கள் இவற்றில் ஜப்பானுடன் போட்டியிடுகிறது. தாய்வான் அரசு தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு முதலீடு பெறவும் உதவிகளை வாரி வழங்குகிறது. 41·4% அமெரிக்காவிற்கும், 12·51% ஜப்பானுக்கும் தாய்வான் ஏற்றுமதி செய்கிறது. தொழில் நுட்பத்திறனில் வெளிநாட்டு உதவியின்றி இன்றுவாழ்வதோடு வளரும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு சொல்லித்தருமளவுக்கு வளர்ந்துள்ளது.

பெரும்பாலான மக்கள் நல்ல உடல் நலத்துடன், வறுமையின்றியும் வாழ்கின்றனர். சராசரி ஆயுள் ஆணுக்கு 65 வயதும், பெண்ணுக்கு 69 வயதும் என்பது பாராட்டிற்குரியதாகும். முக்கிய தொற்று நோய்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. 1965க்குப்பின் மலேரியா ஒழிக்கப் பட்டுள்ளது. 9 ஆண்டு கல்வி அனைவர்க்கும் கட்டாயம்; ஏழைகளுக்கு இலவச வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலான மக்களின் வாகனம் மோட்டார் சைக்கிள்தான்; கார்கள் குறைவு.

இங்குள்ள 3 அரசியல் கட்சிகள் : குவாமிங்டாங், இளைய சீனக் கட்சி, ஜனநாயகக் கட்சி. 1894இல் தொடங்கப்பட்ட குவாமிங்டான் என்ற பழைய கட்சியே ஆளுங்கட்சி. குடியரசு ஆட்சி நிலவும் இந்த முதலாளித்துவ ஜனநாயக நாட்டில், சியாங்கே ஷேக்கிற்குப் பிறகு அவர் மகன் சியாங்-சிங்-குவா குடியரசு தலைவரானார். அவரது மரணத்திற்குப்பின் அண்மையில் லி-டெங்-ஹூய் பலத்த அரசில் பிரச்சனைகளிடையே குடியரசு தலைவராகியுள்ளார். இந்நாட்டின் பூர்வீகக் குடியான இவர், கட்சி தலைமையில் உள்ள சக்தி வாய்ந்த குடியேற்றச் சீனர்களைத் திருப்திப்படுத்தும் சவாலை ஏற்றுள்ளார்.

— உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# சாலை விபத்துகள்

இந்தியாவில் சாவுக்கான 6 முக்கிய காரணங்களில் சாலை விபத்தும் ஒன்று. 5-44 வயது வரம்புடையோர் 10% பேர்களின் மரணம் சாலை விபத்துகளால் நேர்கிறது. வளர்ந்த நாடுகளைவிட இந்தியாவில் 20 மடங்கு சாலை விபத்துகள் மிகுதி. 40,000 பேர்கள் 1986-இல் சாலை விபத்துகள் உயிழிந்துள்ளனர். அதாவது 42 வாகனங்களில் ஒன்று விபத்துக்குள்ளாகிறது. உலகத்தில் மிக அதிகமாக சாலை விபத்துகள் நடக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

இதற்கு முக்கிய காரணம், சினிமா டிக்கெட் வாங்குவதை விட எளிதாக இங்கு லைசென்ஸ் வாங்க முடிவதுதான். வீட்டில் இருந்தபடி பம்பாயில் இருந்து கொண்டு சென்னையில் லைசென்ஸ் வாங்க ரு 150 லிருந்து ரு 300வரைலஞ்சச் செலவு செய்தால் போதும்.

அண்மையில் நடத்திய சாலை ஆய்வுகள் சொல்கின்றன : லைசென்ஸ் (!) பெற்ற பாதி பேர்களுக்குச் சாலை விதிகளே தெரியவில்லை. 80% பேர்களுக்கு வாகனங்களை முந்தும் விதி தெரியவில்லை. 63% பேர்கள் சாலை விதிகளை நாங்கள் பின்பற்றுவதில்லை என்று ஒப்புக் கொண்டுள்ளனர், 173 லாரி டிரைவர்களைப் பரிசோதித்ததில் 98% பேர்களுக்குக் கண் பார்வைக் கோளாறு கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

80% சாலை விபத்துகளுக்கு, மோசமான வண்டியோட்டிகளே காரணம் நாளை என்பதே இல்லையென்று நினைத்துப் பலர் மனம் போல் ஓட்டுகிறார்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக, தனது அயல் நாட்டு ஜீப் அல்லது மெர்சிடிஸ் காரை 100 கி. மீ. வேகத்தில் ஓட்டி முன்னாலும், பின்னாலும் வருபவர்களைத் திணறடித்து விபத்துக்குள்ளாக்கும் பாரத பிரதமர் ராஜீவே விளங்குவது வருந்துதற்குரியது.

நகரங்களில் சாலை விபத்துகளில் மடிவோருள் மூன்றில் ஒருவர் பாதசாரியே. இதனையடுத்து இறப்போர் இரு சக்கர வண்டிக்காரர்கள் சாலைகளில் சாவோரில் 25% மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்காரர்கள். கார்களை விட 5 மடங்கு அதிகமாக இவ்விபத்துகள் நேருகின்றன. அண்மையில் வந்துள்ள தீடீர் வேகம் எடுக்கும் 100C.C மோட்டார் சைக்கிள்களும், மிக சன்னமான மாருதி காரும் விபத்துகள் பெருகக் காரணமாய் உள்ளன.

விபத்துகளால் தனி மனித இழப்பு ஒரு புறம் இருப்பினும் அரசுக்கு ஏற்படும் இழப்பு ஆண்டுக்கு ரு 2000 கோடியாகும். நாட்டின் எல்லா சாலைகளையும் பாதுகாப்பாக அமைக்கப் போதுமான தொகை இது.

—உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ரேஷன் அரிசி

**நியாயமான விலையில் தரமான பொருட்களை எப்போது தருவீர்கள்?**

ரேஷன் கடைகளில் மட்டும் புழுத்தும், நாறியும் போன அரிசி எப்படி வந்து சேர்கிறது? நியாய விலைக்கடைகளில் நடக்கும் இந்த அநியாயத்திற்கு யார் பொறுப்பு?

நிலச் சொந்தக் காரர்களிடம் அரசு "லெவி" என்ற பெயரில் குறைந்த விலையில் நெல் கொள்முதல் செய்கிறது. இந்தக் குறைந்த விலைக்கு அவர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த நல்ல நெல்லைத் தருவதில்லை. வெளி மார்க்கெட்டில் விற்கத் தகுதியற்ற, ஈரமான, தரமிழந்த, பாசி பிடித்த நெல்லையே வழங்குகிறார்கள். இந்த மோசமான நெல்லைக் கண்டு கொள்ளாமல் வாங்க "கைநீட்டி வாங்கும்" அதிகாரிகள் கூட்டம் தயாராக இருக்கிறது. துணை தாசில்தார்–தாசில்தார்–கலெக்டர் வரை இப்படி மோசமான அரிசி அரசு சேமிப்புக்கிடங்குங்கு வந்து சேருவதைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஒரு சமயம் மோசமில்லாத, ஓரளவு சுமாரான அரிசியை இந்த அதிகாரிகள் பெறும் சூழ்நிலை அமைவதுண்டு. இருப்பினும் மிக மோசமாகப் பராமரிக்கப்படும் அரசு உணவுக் கிடங்கில் எப்பேர் பட்ட நல்ல அரிசியையும், ஈரமும், துர்நாற்றமும், பாச்சையும், கரப்பும், செத்த எலியும் ஒரு வழி பண்ணிவிடும்.

இதற்கெல்லாம் இந்த அதிகாரிகள் யாரும் கவலைப் படுவதாக இல்லை. ரேஷன் அரிசியை மட்டும் தான் இந்த அதிகாரிகள், சம்மந்தப் பட்டோர் வாங்கி சமைக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டால் என்ன? சாப்பிடுவார்களா? நெய் வடியும் ஆற்காட்டுக் கிச்சிலியும் முதல் தர பொன்னியும் சாப்பிட்ட நாக்குகளுக்கு ஒரு வேளை ரேஷன் அரிசி உள்ளே இறங்குமா?

நாளும் இந்தப் புழுத்த அரிசியையே வேறு வழியின்றி வயிற்றுக்குள் தள்ள வேண்டிய லட்சக்கணக்கான மக்கள் எப்படியானால் என்ன என்று எத்தனை நாளைக்கு பார்த்துக் கொண்டிருப்பது!

— ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# தமிழரைப் பற்றி கார்ல் மார்க்சு

அறிஞர் கார்ல் மார்க்சு, தம் வாழ்நாளில், இந்தியாவைப் பற்றிய நூல்களைப் படித்த போது மிக இன்றியமையாதவை என நினைத்தவற்றைத் தம் தாய் மொழியாம் செருமனில் குறித்து வைத்துள்ளார். இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு "Karl Marx Notes on India" (1986) எனுந்தலைப்பில் வெளியாகியுள்ளது. இந்நூலில் தமிழரைப் பற்றி மார்க்சு 4 இடங்களில் குறிப்புகள் தந்துள்ளார். அவற்றுள் ஒரு முக்கிய குறிப்பு வருமாறு :

1498 இல் வாசுகோடகாமா என்ற போர்ச்சுக்கீசிய கப்பல் தளபதி கேரளத்துக் கள்ளிக் கோட்டை வந்திறங்கினான். 1608 இல் முதல் ஆங்கிலேயன் சகாங்கீர் அரண்மனையில் மன்னனைச் சந்தித்தான். பின்பு வணிகவரவு வஞ்சமாக ஆதிக்க வரவாக விரிந்தது. எனினும் எல்லா இந்திய நாடுகளும், ஆங்கிலேயனுக்கு எளிதில் அடிமைப்படவில்லை. அவற்றுள் ஒன்று பஞ்சாப். சட்லசு ஆற்றில் கீழக்குக் கரை வரை பிரிட்டிஷ் ஆளுகை வலுப்பெற்றிருந்தது. ஆற்றிற்கு அக்கரை இன்னும் எதற்கும் நெஞ்சங் குலையாப் பஞ்சாபியர் கையில் இருந்து வந்தது. 1845, பிரிட்டிஷ் பேரரசின் கவர்னர் ஜெனரல் ஆர்டிஞ்ச், சர். குகா கூப் ஆகிய இருவரும் 20,000 சீக்கியப் படை வீரர்களை எதிர் கொள்ள முடியாது தவித்தனர், பொருதனர். முடிவு ஆங்கிலேயர் பக்கம் எண்ண முடியாத சாவு. பெருந்தோல்வி அந்த நிகழ்ச்சியை மார்க்சு பின் வருமாறு பொறித்துள்ளார்.

**"ஆங்கிலேயப் பெரு முட்டாள்கள், தென்னிந்திய மக்களை எளிதே அச்சுறுத்தி. வெற்றி கொண்டது போல, பஞ்சாபியரையும் அச்சுறுத்தி வெற்றி கொண்டு விட முடியும் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டனர்"**

தமிழர் உள்ளிட்ட தென்னிந்தியரை எத்துணைக் கவனமாகத் துல்லியமாக மார்க்சு அன்றே எடை போட்டுள்ளார்! இக்குறிப்பால்

1. தமிழர்கள் அஞ்சுங் குணத்தினர் என்பதும்
2. பெரும் படையின் புதிய படைக் கருவிகளுக்கு அஞ்சி அடங்கி விடுவர் என்பதும் மார்க்சின் பார்வை என்பது துலக்கமாகிறது.

(நன்றி :— "தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள் :" — க. ப. அறவாணன்)

FREE E - BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

**அண்ணல் அம்பேத்கார் ஓர் ஆலயம்** (7-50) டாக்டர். அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளைக் கவிதை வடிவில் தந்திருப்பவர் கவிஞர் துவாரகைக் கண்ணன் [MA] அவர்கள் வெளியீடு:— அனித்தா பதிப்பகம், நெ. 39 அரிதாஸ் நாயுடு தெரு. கொளத்தூர், சென்னை-600 099.

**சொல்லாத சேதிகள்** [5-00] ஈழப் பெண் கவிஞர்களின் 25 கவிதைகள். வெளியீடு :- சிலிக்குயில் 20, ப. கோதண்டபாணித் தெரு, கும்பகோணம் 612 001.

**இளந்தமிழன்** மாத இதழ், ஆசிரியர்/வெளியிடுபவர், S. ராஜரத்தினம், சிறப்பாசிரியர் தி. வ. மெய்கண்டார், முகவரி த. பெ. எண் 637, 7, கிழக்கு மாடவீதி மயிலை, சென்னை-600 004. தனியிதழ் ரூ 2-00 ஆண்டுச்சந்தா ரூ. 12-00, ஆயுள் சந்தா ரூ 250-00

**மழை சிந்தும் மேகங்கள்** (0-75) கவிதைத் தொகுப்பு கவிஞர் க. ஜெய்சிலன் முகவரி :- மாடப்பள்ளி' மடவாளம் (அஞ்சல்) திருப்பத்தூர் வ. ஆ. 635653.

**ஞானக்குரல்** (6-00) கட்டுரைகள் தொகுப்பாசிரியர் :- புத்தகப்பித்தன்.

**வால்மீகி ராமாயணம்** (11-00) வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி

**சுலபமாக ஆங்கில அறிவு பெறுவது எப்படி** (6-00) கஸ்தூரிசேகர்

மேற்குறிப்பிட்ட மூன்று புத்தகங்களும் வெளியிட்டிருப்பவர் :- குமரிப்பதிப்பகம் 15, நீல தெற்கு வீதி, நாகப்பட்டினம்-611 001.

**முன்னிலை** - மாதஇதழ் ஆசிரியர்/வெளியிடுபவர்:- தங்க. உமாசங்கர் BSC., BL., தொடர்பு முகவரி : 3/2, பி. கே. தெரு, ஸ்ரீராம்நகர், (ஐ. ஐ. டி. அருகில்) சென்னை-600 113, தனி இதழ் ரூ. 1-00, ஆண்டுச் சந்தா ரூ 15-00.

ஆயுள் சந்தா. ரூ 500, வெளிநாட்டினருக்கு ரூ 1000.

**அழகின்தாகம்** கவிதைத்தொகுப்பு (8-00) முல்லை தாசன். வெளியீடு :- சோலை 43, மே. ச. குப்பம், ரெட்டியூர் (அஞ்சல், ஜோலார்பேட்டை வ. ஆ. 635851.

**மொழி** (3-00) யு. கே. செங்கோட்டையன். மொழி பற்றி சிந்தனையைத்தாக்கும் கருத்துகள். வெளியீடு: லோகியா சமத்துவ இயக்கம், ஈரோடு, கிடைக்குமிடம் : 47, கச்சேரி வீதி, ஈரோடு-638 001.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அவுட் காஸ்ட் (புறக்கணிப்பு)

## பார்த்தே ஆக வேண்டிய படம் !

சென்ற மாதம் நம் டிவி டில்லி நிகழ்ச்சியில் அற்புதமான சீனப்படமொன்று திரையிடப்பட்டது. அரசியல் கருத்தை உள்ளடக்கிய ஒரு கதையைப் பிரச்சார நெடியில்லாமல் உச்சமான மனித நேயத்துடன் சொல்லும் 'அவுட் காஸ்ட்'' என்ற இந்தச் சீனத் திரை ஓவியம் இந்நூற்றாண்டில் மகத்தான கண்ணீர் காவியமாகும்.

படித்த மணமான இளைஞன் கேயின் பிரசவத்தின்போது மனைவி இறந்து விடுகிறாள். குழந்தையை வளர்க்கும் பொறுப்பு அவனுக்கு ஏற்படுகிறது. கலாச்சாரப் புரட்சியை எதிர்த்ததால் தொலைதூரக் கிராமத்தில் வேலை செய்யும் தண்டனை அளிக்கப்படுகிறது. ஆயினும் அவன் திருந்தாததால் சிறைக்குக் கொண்டு செல்லப்படுகிறான்.

அவனது குழந்தை ஷென்ஷியானை வளர்க்கும் பொறுப்பு வயல் வெளியில் வேலை செய்யும் மணமாகாத இளம்பெண் பெலாவ் ஏற்றுக் கொள்கிறாள். இதன் விளைவாக அவள் எத்தனை துன்ப துயரங்களை அனுபவிக்கிறாள், எத்தனை பழி பாவங்களுக்கு ஆளாகிறாள் என்பதுதான் கதை.

அக்குழந்தையின் தந்தை தான் அவளது கள்ளக் காதலன் என்றும், அவனது கருவை அவள் கலைக்கவும் செய்தாள் என்றும் அபாண்டம் கிளம்புகிறது. இதன் விளைவாக அவளது பெற்றோராலும் ஊராலும், காதலனாலும் கூட கைவிடப்படுகிறாள்' தனித்து வாழ்ந்து கடினமாக உழைத்து அக்குழந்தையை வளர்க்கிறாள்.

குழந்தை சிறுவனான போது அவன்கூட இழிவுக்கும் ஏளனத்திற்கும் தப்பவில்லை. ஆனால் அவனுக்குத்தான் தன் தாயின் மீது எவ்வளவு அன்பு! வீட்டு வேலைகளில் அம்மாவுக்கு ஒத்தாசை செய்வதும், அவள் வேலையிலிருந்து திரும்பி வந்ததும் சூடாக எதையாகிலும் கொண்டுவந்து தருவதும், அவளது கைக்கால்களைப் பிஞ்சுக் கைகளால் இதமாக அழுத்துவதும், உடல் நலம் சரியில்லாமல் இருக்கும்போது துக்கத்தை முகத்தில் தேக்கி வைத்து அவளையே சுற்றிச் சுற்றி வந்து துவண்டு போவதும் மனசை உருக்கி விடுகிறது.

பெலாவ் திடீரென்று நோயில் விழுகிறாள். அந்த சமயத்தில் போலீசார் அவளைக் கைது செய்து சிறையில் அடைத்து விடுகிறார்கள். துரோகியின் குழந்தையை வளர்ப்பதுதான் இதற்குக் காரணம். ஒரு சில நாட்களில் நோயினாலும், குழந்தை மீதுள்ள ஏக்கத்தினாலும் போதிய மருத்துவ வசதியில்லாததாலும் சிறையிலேயே இறந்து விடுகிறாள்.

ஒரு கன்னிப் பெண்ணால் தன் உயிரையும் அர்ப்பணிக்கும் அளவிற்கு இத்தகைய தாய்மையை வெளிப்படுத்த முடியும் என்று காட்டும் இப்படியோர் அமரத்துவமான கதாபாத்திரம் இதுவரை திரையில் படைக்கப்பட்டதில்லை, சிறுவன் சென்ஷியானாக நடிக்கும் சென்பங்கையும், வளர்ப்புத் தாயாக நடிக்கும் மீபிகியையும் நம்மால் நீண்ட நெடுங்காலத்திற்கு மறக்க முடியாது.

வாசகர்கள் கடித மழை பொழிந்தால் டிவிக்காரர்கள் இப்படத்தை மீண்டும் நமக்குப் படைக்கக்கூடும்.

— டி. எஸ். ரவீந்திரதாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# புகை பிடிக்காமை நாகரிகமாகிறது

எதிர்காலத்திற்குள் மனிதன் பயணம் செய்வதற்கான வாகனம் ராக்கெட்டோ வேறு ஏதோ ஒன்றுமில்லை. மானிடக் குழந்தைகள்தான்! மனிதச் சங்கிலியைப் புகையினால் அறுத்து விடக்கூடாது.

புகைபிடித்தல் என்பது தனிநபர் சார்ந்த ஒரு பிரச்சனை மட்டுமில்லை. இன்று அது ஒரு சமூக நோயாகவே கருதப் படுகிறது. அமெரிக்காவில் ஒரு கணக்கெடுப்பில்: புகை பிடிப்பவர் தனது வேலை நேரத்தில் 6% பகுதியைப் புகைப்பதில் வீணடிக்கிறார். 50% மற்றவர்களை விட கூடுதலாக மருத்துவ விடுப்பு எடுக்கிறார். இதனால் பிறரைவிட புகைபிடிப்பவர்களால் ஒரு நிறுவனத்திற்கு ஆண்டுக்கு ரூ 13000 கூடுதல் செலவாகிறது என்று கண்டுபிடித்துள்ளனர். இதனால் அங்கே தொழிலகங்களில் புகைப் பழக்கத்தை விடும் நபர்களுக்குப் பரிசும் வழங்கப்படுகிறது.

மனிதர்களுக்கு மட்டுமல்ல, கம்ப்யூட்டர்கள் மற்றும் நவீனமான புதிய எந்திரங்களுக்குப் புகையே ஆவதில்லை இவற்றின் அருகில் கூட புகைபிடிப்பவர்கள் நெருங்க முடியாது. இதனால் பெரும்பாலான அமெரிக்க அலுவலகங்களில் புகைப்பிடிப்பதற்குத் தனி இடம் ஒதுக்கிவிட்டார்கள்.

இன்றைய லேட்டஸ்ட் ஃபாஷன் புகை பிடிக்காமல் இருப்பதுதான். இந்தியாவில் சிகரெட்டின் உபயோகம் குறைந்து வருகிறது. 1984-85ல் 95 மில்லியன்கள் விற்பனையான சிகரெட்டுகள் 1987-ல் 60 மில்லியன்களாகக் குறைந்துள்ளன.

மராட்டிய மாநில அரசு சார்ந்த பஞ்சாயத்து மற்றும் அரசு அலுவலகங்களில் புகை பிடிப்பதற்கும் புகையிலை போட்டுத் துப்புவதற்கும் தடை விதித்துச் சட்டம் இயற்றப் பட்டு விட்டது. சிக்ரெட் விழாக்களில் அரசு அலுவலர்கள் பங்கு கொள்ள மாட்டார்கள் எனவும் அறிவித்துள்ளது.

உலகநாடுகள் எங்கேயும் தொலைகாட்சிகளால் சிக்ரெட் விளம்பரங்கள் அனுமதிக்கப் படுவதில்லை.

திரைப்படங்களில் ஆபாச காட்சிகள் தணிக்கை செய்யப் படுவது போல ஸ்டைலாகவும் பிரச்சனைக்கு வடிகாலாகவும் சிகரெட் குடிக்கும் காட்சிகள் தணிக்கை செய்யப் பட வேண்டும். பொறுப்பான பணிகளில் அமர எப்படி பைத்தியம் மற்ற தொற்று நோயாளிகள் அனுமதிக்கப்பட மாட்டார்களோ அதுபோல சிகரெட் பைத்தியங்களுக்கும் பொறுப்பான அரசு தனியார் பணிகள் மறுக்கப்படல் வேண்டும்.

வளரும் பசுமையிலிருந்து : நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,



# தொலைக்காட்சி குழந்தைகளைப் பாதிக்கிறதா?

நம் தொலைக்காட்சியைப் பார்ப்போரில் சுமார் 65% குழந்தைகளே. பள்ளியையும், நண்பர்களையும்விட டிவியே இவர்களுக்கு நெருக்கமாக மட்டுமின்றி, வழிகாட்டியாகவும் ஆகி வட்டது. இதனால் தாய், தந்தை, தவிர 3வது பெற்றோராகவே டிவி இன்று கருதப்படுகிறது.

இந்த உண்மையைப் புரிந்துகொண்டே விளம்பரதாரர்கள் குழந்தைகளைக் குறிவைத்தே விளம்பர அம்புகளை வீசுகிறார்கள். இதனால் கீழ்க்கண்ட பாதிப்புகள் ஏற்படுவதாக உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

O விளம்பரத்தில் வரும் பொருட்களைப் பெறமுடியா ஏழைக் குழந்தைகள் மற்ற குழந்தைகள் இதனை அனுபவிப்பதைப் பார்த்து ஏங்குகின்றன; காலப்போக்கில் பெற்றோர்க்கும், சமூகத்திற்கும் எதிராக கலகம் செய்யும் மனநிலையை இவர்கள் பெறுகின்றனர்.

O ஆபாச ஆண், பெண் நெருக்கத்தைப் பார்த்து விபரீத எண்ணங்கள் குழந்தைகள் மனதில் பதிவாகின்றன. வளர்ந்தபின் பெண்களைக் கிண்டல் செய்தல், தவறான நடவடிக்கையில் இறங்கல் போன்ற சீர்கேடுகளுக்கு இவர்கள் உந்தப்படுகிறார்கள்.

O குழந்தைகள் மனதில் தேவையற்ற பயமும், வீண் குழப்பமும் ஏற்படுத்துவதாக சில விளம்பரங்கள் அமைகின்றன. எடுத்துக்காட்டு: ஒனிடா டிவியின் பொறாமைச் சாத்தான் பாம்பே டையிங்கில் சினிமா திரையிலிருந்து வரும் ஆண் இளம்பெண்ணைக், கவர்ந்திழுத்து செல்லலும், அவள் தாயார்மயங்கி விழுதலும், சானிடரி நாப்கின், குடும்பக் கட்டுப்பாடு சாதன விளம்பரங்கள்.

லட்சக்கணக்கான குழந்தைகள் டிவியைப் பார்க்கிறார்கள் என்ற பொறுப்புணர்ச்சியோடு விளம்பரதாரர்கள் விளம்பரம் செய்வதில்லை. பொருள்கள் எப்படியாவது விற்று காசாக வேண்டும் என்பதில்மட்டுமே குறியாக உள்ள வணிக நிறுவனங்களுக்கு குழந்தைகள் சீரழிவதைப் பற்றிக் கவலையில்லை.

ஆண்டுக்கு ரூ. 200 கோடிக்கு மேல் விளம்பரங்களால் பொருள் ஈட்டும் டிவி நிறுவனம், டிவியையே விளம்பரதாரர்களிடம் அடகு வைத்துவிட்டது. எனவே குழந்தைகளின் அறிவாற்றலையும் ஒழுக்கத்தையும் உயர்த்தும் நிகழ்ச்சிகளை நம் டிவியில் காண்பது அரிதே. குழந்தைகளுக்கு மிகக்குறைவான நேரம் ஒதுக்கும் டி.வி. சென்னை டி.வி. தான்.

| | டிவி பார்ப்போரின் விழுக்காடு | | சிறுவர் நிகழ்ச்சிகள் தினமும் (நிமிடங்களில்) |
|---|---|---|---|
| | பெரியவர்கள் | குழந்தைகள் | |
| டில்லி | 25·5 | 72·4 | 75 |
| பம்பாய் | 28·3 | 64·1 | 90 |
| கல்கத்தா | 29·0 | 67·9 | 112 |
| சென்னை | 37·4 | 57·2 | 30 |

— புஸ்வாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

சதியை ஊக்குவிக்கும் செயலில் ஈடுபடுவோர்க்கு ஓராண்டிலிருந்து 7 ஆண்டுகள் வரை சிறைவாசமும், ரூ. 5000 லிருந்து ரூ. 30,000 வரை அபராதமும் உண்டு.

— *சதி தடுப்புச் சட்டம் 1987*

# சதியை ஊக்குவிக்கிறார் சங்கராச்சாரியார்

*பூரி சங்கராச்சாரியார் சதியை ஊக்குவித்து, மூடத்தனத்தின் முடை நாற்றம் வீசும் அறிக்கையொன்றை பூரியிலிருந்து வெளியிட்டுள்ளார். அதில் கூறப்படுபவை :*

*சதியை வேதம் ஒப்புக் கொள்கிறது. ராஜாராம் மோகன்ராய் ஒரு மாபாவி. அவரால்தான் இந்து சமூகம் விதவைப் பிரச்சனையால் வாடுகிறது. அதாவது சதியை ஏற்றுக் கொண்டிருந்தால் விதவைகளே இருக்கமாட்டார்கள். இந்த சதி விரதத்தை என் உயிரைக் கொடுத்தும் காப்பேன். அதற்காக தூககுமேடை ஏறவும் தயார்.*

*ஆரிய சமாஜத்தைச் சார்ந்த சுவாமி அக்னிவேஷ் என்பவர் சங்கராச்சாரியார் கூறுவது இந்து தர்மத்தில் இல்லாத அபத்தம் என்று கூறி, அவரைப் பொதுமக்கள் முன்னிலையில் வாதத்துக்கே அழைத்தார். ஆனால் சங்கராச்சாரியார் வரவில்லை. டில்லியில் பொது மக்கள் முன்னிலையில், இந்தச் சங்கராச்சாரியார் சதி தர்மத்தின் பெருமைகளைப் பேசப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்த போது, சுவாமி அக்னிவேஷ், சதி தடுப்புச்சட்டம் 1987 ஐ சுட்டிக் காட்டி உச்ச நீதிமன்றத்திற்கு ரிட் மனு சமர்ப்பிக்க, தூக்குமேடை ஏறப்போவதாகச் சொன்ன சங்கராச்சாரியார், பேசாமல் பின் வாங்கினார்.*

*நேர் உரையாடல்களிலும், நேர்காணல்களிலும் இது தொடர்பாக சங்கராச்சாரியார் கீழ்க்கண்ட மூடக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார் :*

O *இந்து வேத சாத்திரங்கள்படி கணவனை இழந்த விதவை, வாழ்நாள் முழுவதும் அவதிப்படவேண்டும் அல்லது ''சதி'' உடன்கட்டை ஏறவேண்டும். இவற்றில் 'சதி'யே சிறந்தது, வாழ்நாள் முழுவதும் விதவையாய் அவதிப் படுவதை விடச் சில கணங்கள் தீயிலே வெந்து மடிவதுமேல் மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்து கொள்ள வேண்டும். காரணம் தனது அவன் சந்ததியை ஏற்படுத்த வேண்டியுள்ளது.*

O *அரசின் இந்து எதிர்ப்பு கொள்கையால் இந்தியா நரகத்துக்குப் போகும். சதி எதிர்ப்புச்சட்டம் கொண்டு வந்ததிலிருந்தே இயற்கை புரட்சி செய்கிறது. கோடையிலும் குளிர்கிறது. மழைகாலம் தவறுகிறது. காலங்கெட்ட மழை பயிர்களை அழிக்கிறது. எவ்வளவு விபத்துகள்! புயல்கள்!*

*பகுத்தறிவையும், பெண்ணின் பெருமையும், தீ வைக்கப் புறப்பட்டிருக்கும் இவரை ஏன் இந்திய அரசு இன்னும் கைது செய்யவில்லை ?*

—*அஞ்ஞானி*

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இயேசுவை விற்கும் வியாபாரி



அற்புத சுகமளிக்கும் ஆராதனைக் கூட்டங்கள் போட்டு, ஆயிரக்கணக்கானோரை கவர்ந்திழுத்து வருபவர் மதப்பிரச்சாரகர் டி.ஜி.எஸ் தினகரன் சுவரொட்டிகளிலும், மேடைகளிலும் இவர் அளிக்கும் அரசியல்தனமான கவர்ச்சி விளம்பரங்கள் இவரைப் பற்றிய ஐயங்களை எழுப்பியுள்ளன. எனவே அவருடன் நெருங்கியவர்களை விசாரித்த போது கீழ்க்கண்ட உண்மைகளைப் பெற முடிந்தது.

O மேட்டூரில் இவர் வங்கி ஊழியராக இருந்தவர் திடீரென பைப்பிளில் உள்ள போதனைகளால் கவரப்பட்டு மதப்பிரச்சாரத்தில் ஈடுபட்டதாகச் சொல்லிக் கொள்கிறார். இன்று அவர் லட்சாதிபதி.

O இவர் பணம் வாங்காமல் ஒரு கூட்டம் கூட நடத்துவதில்லை. ஆயிரம் ரூபாய் கொடுத்தால் மாணவன் தலையில் கையை வைத்து ஜெபம் செய்கிறார். இதுபோல் இவர் 14 வகைகளில் கிறிஸ்துவர்களிடமிருந்து பணம் வசூலிப்பதாகத் தெரிகிறது.

O இவரது அண்ணாநகர் பங்களா முழுவதும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டது. இது தவிர வேளச்சேரியில் தங்கி இளைப்பாறும் பங்களாவின் மாத வாடகை ரூ. 10,000. இவர் எப்போதும் அணியும் சூட் மிகவும் விலை உயர்ந்தது, அவர் காரும் அப்படியே. இவர் கமிட்டி கூட்டம் நடத்துவது கன்னிமாரா ஓட்டலில்.

O இவர் ஜெபம் செய்தால் - நோயாளிகள் குணமாகி விடுகிறார்கள் மனக் கஷ்டம் உள்ளவர்கள் தென்படைவார்கள்..இன்னும் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்த்துவார். ஆனால் இவருக்கு நோய் வரும் போதெல்லாம் அமெரிக்கா சென்று உயர்தர மருத்துவமனையில் சேர்ந்து குணம் பெற்றே வருகிறார். இவர் மகள் கார் விபத்தில் இறந்து போனதையும் இவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

O இயேசு என்னிடம் பேசினார். கல்விச்சாலை கட்டச் சொன்னார் என்று சொல்லி பெரும் பொருள் திரட்டி, தனியார் பொறியியல் கல்லூரியை ஆடம்பரமாக நடத்தி வருகிறார். இதில் இவர் மகனும் மனைவியும் முதன்மை டைரக்டர்கள்.

என்னைப்பின்பற்றி வருபவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வரவேண்டும் என்றும் ஊசியின் காதுக்குள் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையும் செல்வர் மோட்சத்திற்குள் நுழையவே முடியாது என்று கூறி எளிமையின் சின்னமாக பாமரர்களின் பிரதிநிதியாக விளங்கியவர் இயேசு. அந்த இயேசுவே விற்கும் வியாபாரியாக தினகரன் விளங்குகிறார் —இசு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது வேப்பம் பூ மருத்துவம்

°° *வயிற்றில் பூச்சியா?* வேறு ஆங்கில மருந்துகளை விட வேப்பம் பூ வயிற்றுக்குத் தீங்கின்றி, குடலிலுள்ள மலக்கிருமிகளை ஒழிக்கும். கண்டதையும் தின்னும் சிறுவர்களின் வயிற்றைச் சுத்தப்படுத்த, வேப்பம் பூ கஷாயம் கொடுங்கள் சரியாகிவிடும்.

°° *உடல் பருமனைக் குறைக்க வேண்டுமா?* நாள்தோறும் வேப்பம் பூ ஊற வைத்த குடிநீர் அருந்தினால் விருப்பத்திற்கேற்ப மெலியலாம்.

°° *காதில் சீழ், அல்லது இரணம் இருக்கிறதா?* நல்ல கொதி நீரில் வேப்பம் பூவைப் போடுங்கள் ; ஆவி வரும். ஆவியைக் காதில் பிடித்தால் சீழ், இரணம் சரியாகும். தொண்டைப் புண்ணாக இருந்தால், வாயைத் திறந்து தொண்டைக்குள் பிடியுங்கள் தொண்டைப் புண் குணமாகும்.

°° *வாந்தி வரும் உணர்வா? அடிக்கடி ஏப்பமா?* வேப்பம் பூவை வறுத்துப் பொடி செய்து, பருப்பு ரசத்துடன் கலந்து சாப்பிடுங்கள். வாந்தியும், ஏப்பமும் தரும் தொல்லைகள் அறவே நீங்கும்.

°° *வேப்பம் பூவின் சிறப்பு என்ன?* வேப்பம் பூ சீரண சக்தியை அதிகரிக்கும் ; உடல் வெப்பத்தை ஏற்படுத்தும்; பித்தத்தைக் கண்டிக்கும்.

°° *கண் பார்வை பளிச்சிட வேண்டுமா?* உலர்ந்த வேப்பூவை நன்கு இடித்து, சம அளவு வெடியுப்புப் பொடியுடன் கலந்து காற்றுப் புகா குப்பியில் வையுங்கள். வேண்டும்போது எடுத்து கண்களில் தீட்டி வர வேண்டும். நல்ல பலன் பெறுவீர்கள்

°° *எந்த நோயும் அணுகாதிருக்க வேண்டுமா?* வேப்பம் பூவைத் தேனில் ஊற வையுங்கள். ரோஜாப்பூ குல்கந்து மாதிரி இது வேப்பம் பூ குல்கந்து. படுக்கும் முன் கொட்டைப்பாக்கு அளவு சுவையுங்கள் நோயற்ற வாழ்வு வாழ்வீர்கள்.

— **சித்தன்**

முறையாக யோகசனம் கற்க அரியதோர் வாய்ப்பு!

சுட்டி அறம் சார்பில் விரைவில் யோகசன வகுப்புகள் தொடங்கவிருக்கின்றன. எளிய முறையில் சிறந்த பயிற்சியாளர் பயிற்சி அளிக்கிறார். வாரம் இருமுறை வகுப்புகள், குறைந்த கட்டணம். சென்னை வாசகர்கள் பயனடையலாம். தொடர்பு கொள்க :

"சுட்டி அறம்" AP-638, H-பிளாக், அண்ணாநகர்,
சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஒரு ரூபாய் மருத்துவ கிளினிக்!

ரூபாய்க்கு படி அரிசி போடுவதாக அரசியல் வாதிகள் ஸ்டண்ட் அடிப்பார்களே அது மாதிரி எண்ணிவிட வேண்டாம். உண்மையாகவே மருத்துவச் செலவு ரூ 1 மட்டுமே. நாடெங்கும் மருத்துவ மனைகளும், கிளினிக்குகளும் பச்சையாக, இதய மற்று, வியாபாரத்தில் இறங்கி விட்ட நேரத்தில் ஹைதராபாதில் Rs. 1 CLINIC என்ற பெயரில் ஒரு மருத்துவக் கிளினிக் சேவை மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறது.

சமூக அக்கறையுடைய மருத்துவர்கள் சிலர் ஒன்று கூடி, இங்கு உண்மையான மருத்துவப் பணி புரிகிறார்கள். டாக்டர் பஜரங்லால் என்பவரின் தலைமையில் சென்ற ஆண்டே இது தொடங்கப்பட்டது. ஜெயண்ட்ஸ் இண்டர் நேஷனல் என்ற அமைப்பு இவர்கள் பணிக்கு உதவ முன் வந்துள்ளது இந்த கிளினிக்கைத் தொடங்குவதற்கு முன் வரை டாக்டர் பஜரங்லால் ஆஸ்மானியா மருத்துவக் கல்லூரியில் துணைப்பேராசிரியராக இருந்தார். இவரது இந்த மருத்துவப் பணிக்கு இவரது தந்தையார் இடத்தைத் தானமாகத் தந்து ஊக்குவித்துள்ளார்.

ஒரு நாளைக்கு இங்கு சுமார் 75 நோயாளிகள் வருகிறார்கள். நேரம் காலை 8-30 முதல் 10-30 வரை ஒரு ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டு, மருத்துவ ஆலோசனையும், ஒரு நளைக்குத் தேவையான மருந்தும் இலவசமாக வழங்குகிறார்கள்.

ஒரு சமயம் நோயாளிக்கு முற்றிய, நாள் பட்ட நோய் இருப்பின், இதனை எங்குப் போய் சரியாக குணப்படுத்தலாம் என்று கூறுவதோடு, இந்தச் சிகிச்சைக்கு முறையாக என்ன செலவாகும் என்றும் கூறி விடுகிறார்கள். இதனால் நோயாளிகள் கண்ட இடத்தில் மாட்டிக்கொண்டு ஏமாறாமல் சிகிச்சை பெறுகிறார்கள். இதுவே இன்று பெரிய சேவையல்லவா?

தமிழகத்தில் இது போல ஏதேனும் மருத்துவ சேவை நிலையங்கள் - (வெறும் அரசு தர்ம ஆஸ்பத்திரி அல்ல) இருக்கின்றனவா?

— இசு

ஆசிரியர் : கு. நாராயண பாரதி, வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன், அச்சிடுபவர் : எம். எஸ். ரவீந்திரன். ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-600 005 முகவரி 1494, அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வேதாரண்யம் உப்புத் தொழிலாளர் அவதி

மறைமலை நகர் மாநாடு போல காங்கிரஸ் கட்சியின் வெறும் தேர்தல் விளம்பரம்தான் வேதாரண்ய உப்புச் சத்தியாகிரக நினைவு யாத்திரையும்! காங்கிரசைக் கலைக்கச் சொன்ன காந்தியடிகள் இன்று உயிரோடிருந்தால், “வேதாரண்யத்தில் உப்புத் தொழிலாளர் பிரச்சனை பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. அதைத் தீர்ப்பது பற்றிய பிரக்ஞையே இன்றி உங்களுக்கு என்ன விளம்பர ஊர்வலம் வேண்டிக்கிடக்கிறது' என்று கூறி ஊர்வல மறிப்புப் போராட்டமே நடத்தியிருப்பார்.

ஆம்! வேதாரண்யத்தில் உப்புத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, ஆயிரம், இரண்டாயிரம் அல்ல 10,000 தொழிலாளர் வேலை இழந்து தவிக்கிறார்கள்.

கடந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள உப்பு மூட்டைகள் விற்க முடியாமல் மூலையில் தேங்கிக் கிடக்கின்றன வேதாரண்யத்திலிருந்து ரெயில் வேகன்கள் மூலம் வெளி மாநிலங்களுக்கு உப்பு அனுப்பப்பட்டு வந்தது. இப்போது அரசு ரெயில் வேகன்களைக் குறைந்துள்ளதால், வெளி மாநிலங்களுக்கு அனுப்ப முடியவில்லை. இதனால் 10,000 குடும்பங்கள் வேலையின்றி பட்டினிக் கிடக்கின்றனர்.

அதிக வேகன்கள் அனுப்ப அரசுக்கு இம்மக்கள் கோரிக்கை விடுத்தும் இன்னும் எந்தப்பலனும் இல்லை. இவர்கள் பிரச்சனையைத் தீர்க்கும் சகல வல்லமையும், மாநிலத்தைத் தற்போது ஆளும் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. இவர்களின் வேதனை உப்புக் கண்ணீரைத் துடைக்க முன்வராத அரசு, தனது கட்சியின் விளம்பரத்துக்காக வேதாரண்ய உப்புச் சத்தியாகிரக ஆடம்பர ஊர்வலம் நடத்துவது, காந்தியடிகளை மட்டுமின்றி, தமிழ் மக்களையே அவமதிப்பதாகும். — இசு

*சுட்டிவாசகர்கள் கவனத்திற்கு.,*

உங்களூரில் சுட்டி கடைகளில் கிடைப்பதில்லையா? உங்கள் முகவர் நின்றிருக்கலாம். எனவே கடைகளுக்கு வராமலிருக்கக்கூடும். கடைகளில் சுட்டி கிடைக்காமையால் சுட்டி நின்று விட்டதாக சில வாசகர்கள் அஞ்சுகிறார்கள் கடந்த87 மாதங்களாக சுட்டி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம். சுட்டிக்கு ரூ 10/- பணவிடை செய்து சந்தாதாராவதே சுட்டி உங்களுக்குத் தவறாமல் வீட்டில் கிடைக்க நிச்சய வழி.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுண்டல் விற்கும் சிறுவர்கள்



குழந்தை உழைப்பும், கொத்தடிமைத்தனமும் ஒழிக்கப்பட்டு விட்டன என்று சொல்லுவது பச்சைப் பொய். தமிழக தலைநகரில், மெரினா கடற்கரையில் இவை இரண்டும் கொடிகட்டிப் பறப்பதைக் காணலாம்.

மெரினா கடற்கரையில் காற்று வாங்க வருவோரிடம், 5 நிமிடத்துக்கு ஒரு முறை வந்து சுண்டல் வாங்க ஓயாமல் வற்புறுத்தும் சிறுவர்கள் நம் சிந்தனைக்குரியவர்கள். இவர்கள் சிலரைப் பேட்டி கண்டதில் பல பரிதாபத்திற்குரிய உண்மைகள் நெஞ்சை உலுக்கின.

O பள்ளி செல்ல வேண்டிய வயதில் படிப்பு வாசனையே உணராது, இந்நாட்டில் எழுத்தறியாமை நோயை அடுத்த நூற்றாண்டிற்கும் எடுத்துச் செல்வது போல 6-லிருந்து 15 வரை உள்ள அப்பாவிச் சிறுவர்கள் சுண்டல் விற்கும் தொழிலில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாகப் புகுத்தப்பட்டுள்ளனர்.

O இவர்கள் பெரும்பாலும் ராமனாதபுரம் பகுதியிலிருந்து - சிறப்பாக பரமக்குடியிலிருந்து, ஆசை வார்த்தை காட்டி அழைத்து வரப்பட்டவர்கள். பட்டணத்தைப் பார்க்கும் மோகத்தில், சென்னையில் தொழில் செய்யும் அந்த ஊர் ஆசாமியுடன் கிளம்பி வந்துவிடுகிறார்கள். இச்சிறுவர்கள் பலருக்கு ஊரில் நிலபுலன்களும் போதிய வசதியும் உண்டு.

O நொச்சிக்குப்பம் போன்ற கடற்கரைச் சேரிப்பகுதிகளில் ஒருவீட்டில் சுமார் 10 சிறுவர்களை ஒரு முதலாளி தங்க வைக்கிறான் மாலை 3 மணியானவுடன் சுண்டல், முறுக்குடன் கிளம்பவேண்டும் இரவு திரும்பும்போது சுமார் 20 ரூபாய்க்குக் குறையாமல் விற்றிருக்க வேண்டும். இல்லையேல் அடி, திட்டு, உதை. விற்காமல் மிஞ்சிய சுண்டலை, சமுசா தயாரிக்கும் தின்பண்டக் கடைகளுக்கு விற்று விடுகிறார்கள் இந்த முதலாளிகள்.

O உயிர் வாழுமளவுக்கு உணவும், படுக்க இடமும், சுண்டல் விற்கும் வேலைக்கு ரூ. 50 மட்டுமே சம்பளமும் தரப்படுகின்றன. சம்பளத்தை மாதாமாதம் பெறமுடியாது. ஓராண்டோ, அதற்குப்பிறகோ (கடைசி கட்டமாக அந்தச் சிறுவன் முரண்டு பிடிக்கும்போது) ஊருக்கு அனுப்பினால், இந்தத் தொகையைத் தருவதாகச் சொல்கிறார்கள்.

O எப்படியாவது இந்த முதலாளியிடமிருந்து தப்பித்துச் சொந்த ஊருக்குப் போகவே இந்த இளந்தளிர்கள் துடிக்கின்றன. ஆனால் அதற்கு வழியுமில்லை, கையில் காசு தரமாட்டான் முதலாளி ஓடவும் முடியாது. மாலை சுண்டல் விற்கும் நேரத்தில் முதலாளியோ அவன் ஆளோ கடற்கரையில் ஓரிடத்தில் காவல் நின்று இச்சிறுவர்களைக் கவனித்துக் கொண்டே இருப்பான்.

நேர்காணல்: எழில், நிலா.

FREE E - BOOKS , www.thamizham.net.,



## தமிழ் இதழ்களைப் படிப்போர்

தமிழ் நாட்டு நகரங்களில் மாணவர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அறிவு ஜீவிகள் எனப்படுவோர் தமிழ் இதழ்களைப் படிப்பதில் அந்நியப் பட்டு வருகிறார்கள். இதனால் தான் தமிழில் நல்ல இதழ்களைக் கொணர்வதும், வெளிக் கொணர்ந்தால் விற்பதும் கல்லில் நார் உரிப்பது போலிருக்கிறது.

அறிவு ஜீவிகள் ஆங்கிலப் பத்திரிகை படிப்பதும், சாதாரணமானவர்கள் தாய் மொழி இதழ்களைப் படிப்பதும், தமிழகம் தவிர, இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை இதனால் தாய்மொழி இதழ்கள் தரத்தில் உயர்வது பிற மாநிலங்களின் சாத்தியமாகவும், தமிழில் அசாத்தியமாகவும் உள்ளது.


மாயையிலும், அறியாமையிலும், மூழ்கி பொழுது போக்கு சிற்றின்பங்களையே பேரின்பங்களாக நினைக்கும் பாமர கூட்டமே தமிழ் வாசகர் கூட்டத்தின் பெரும்பகுதியாகும். இது பலரும் ஆய்ந்த கசப்பான உண்மை. பக்கத்திற்குப் பக்கம் சினிமா நடிகை மேக்கப் முகம் இருக்க வேண்டும்; அங்கங்கே அசட்டு ஜோக்குகள் கிச்சு கிச்சு மூட்ட வேண்டும்; நுனிப்புல் செய்திகள் வேண்டும். இப்படி மசாலா இதழ் நடத்தினால்தான் இங்கு "போணி" ஆக முடிகிறது.

சற்று மாறுபட்டு, ஆழமான அறிவார்ந்த செய்திகளுடன் பத்திரிகை நடத்திய பல நல்லவர்களைத் தமிழகம் நோகடித்து விட்டது. மசாலா நுனிப்புல் இதழ்கள் லட்சக்கணக்கில் பாமர தமிழ் வாசகர்களால் விழுங்கப்படும்போது, நல்ல அறிவார்ந்த இதழ்களை 1000 பிரதிகள் வாங்கக்கூட ஆள் இல்லை; நல்ல தமிழ் இதழ்களை வாங்க பாமரர்கள் முன் வராதது போல, அறிவு ஜீவிகளும் முன் வராமை தான் வருத்தமளிக்கிறது. தமிழ் அறிவு ஜீவிகள் பலரும் ஆங்கிலத்தில் மட்டுமே இதழ்கள் படிப்பதாக சபதம் எடுத்துக் கொண்டு விட்டார்களா?

மலையாளத்தில் லட்சக்கணக்கில் விற்கும் "மாத்ரு பூமி" இதழில் "மார்க்சிய அழகியல்" என்ற ஆழமான தலைப்பில் தொடர் கட்டுரையொன்று வெளிவந்த போது, லட்சக்கணக்கான அறிவார்ந்த மலையாள வாசகர்கள் இதனை ஆர்வமுடன் வாங்கிப் படித்தார்கள். தமிழில் எந்த இதழிலாவது இப்படியொரு கட்டுரை வெளியிட முடியுமா? வெளியிட்டால் நம் அறிவு ஜீவிவர்க்கம் படிக்க முன் வருமா?

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,




# குளிர் சாதனப் பெட்டியின் கதை

மேற்கத்திய நாடுகளின் அசைவர்களே குளிர்சாதனப் பெட்டி தோன்றக் காரணமாயிருந்தவர்கள்.

போக்குவரவு வசதிகள் பெருகிடாத காலங்களில் நகர் வாழ்மக்களுக்குக் கிராமங்களிலிருந்து இறைச்சியைக் கொண்டு செல்ல பல நாட்களாயின. இடையில் இறைச்சி அழுகி வீணாகும் நிலை ஏற்பட்டது. தொலைதூரங்களுக்கு இறைச்சியைக் கெடாமல் எடுத்துச் செல்வது எப்படி என ஆராய்ந்து முயன்றதன் பயனாகவே குளிர்சாதனப் பெட்டி தோன்றியது.

ஜேம்ஸ் ஹாரிசன் என்பவர் ஸ்காட்லாந்து நாட்டவர். இவர் ஆஸ்திரேலியாவில் ஒரு அச்சகராகப் பணியாற்றி வந்தார். ஒரு நாள் தமது அச்செழுத்துக்களை ஈதரின் உதவியால் சுத்தம் செய்து கொண்டிருந்தார். ஈதர் பட்டவுடன் அந்த உலோக எழுத்துக்கள் குளிர்ச்சியடைந்ததைக் கண்டார். இதை மனதில் கொண்டு சில சாராய ஆலைகளைச்சுற்றி குளிர்ந்த ஈதர் வாயுவைக் குழாய்கள் மூலம் பம்ப் செய்து ஆலைகளையே குளிர்வித்து வெற்றி கண்டார். இதே முறையை வீடுகளில் பனிக்கட்டி தயாரிக்கவும் பயன்படுத்தினார். 1851 முதல் 1860 வரை நடத்திய பல பரிசோதனைகளின் விளைவாக இவர் ஓட்டாண்டியாகவே ஆகி விட்டார். அமெரிக்கர்கள் உறைந்த ஆறுகளிலிருந்து பனிக்கட்டிகளை எடுத்து வந்து விற்று இவரது பனிக்கட்டி வியாபாரத்தைப் பாதித்து விட்டனர்.

1880 இல் அதே ஜேம்ஸ் ஹாரிசனே 40 டன் எடையுள்ள ஆட்டிறைச்சியையும் மாட்டிறைச்சியையும் ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்னிலிருந்து லண்டனுக்குக் கெடாமல் கொண்டு சேர்த்தார். 2 மாதங்களுக்கு மேல் கப்பல் மூலமாக இறைச்சி கெடாமல் கொண்டு சென்ற சாதனையைப் புரிந்தார்.

1879 கார்ல் லோன் லிண்ட் என்ற ஜெர்மானியர் அம்மோனியா வாயுவைப் பயன்படுத்தி குளிர்விக்கும் முறையைக் கண்டுபிடித்தார். அதன்படி தயாரிக்கப்பட்ட 12,000 குளிர் சாதனப் பெட்டிகள் 1891 ல் ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் விற்பனையாயின. இவை நீராவியால் இயங்கின.

1923-ல் ஸ்விடனைச் சேர்ந்த பல்சார் லோன் ப்ளேட்டன், கார்ல் மண்டர்ஸ் என்ற இரு என்ஜினியர்கள் நீராவியைத் தவிர்த்து மின்சாரத்தினால் கம்ப்ரெசரை இயக்கும் முறையைக் கண்டுபிடித்தனர். இந்தக் கண்டுபிடிப்பை இவர்கள் சிகாகோவைச் சேர்ந்த கெல்வினேட்டர் கம்பெனிக்கு விற்றனர். அவர்களே பின்பு உலகில் பெருவாரியான குளிர்சாதனப் பெட்டி தாயரிப்பாளர்களாக விளங்கினர்.


1930 வரை அம்மோனியா, கந்தக அமிலம் போன்ற நச்சுப் பொருட்களே குளிர்விக்கப் பயன்படுத்தப் பட்டன. பல சோதனைகளுக்குப் பிறகு ஃப்ரீயான் என்ற எவ்வகையிலும் ஆபத்தில்லாத ரசாயனப் பொருளைக் கண்டுபிடித்தனர். இதனையே இப்போது குளிர்சாதனப் பெட்டிகளிலும் காற்றுக் கட்டுப்பாடு அமைப்பான்களிலும் (Air Conditioners) உபயோகிக்கிறார்கள்.

வியாபாரிகளின் தேவைக்காகத் தோன்றிய போதிலும் குளிர் சாதனப் பெட்டி குளிர்மிக்க நாடுகள் பலவற்றிலும் இல்லத்தரசிகளின் அன்றாடத் தேவையாக எளிமைப்படுத்தப்பட்டு விட்டது.

குளிர்சாதனப் பெட்டியின் பயன்கள் ஏராளமானவை. மனிதனின் உணவு தேடுகின்ற, தயாரிக்கின்ற நேரத்தை மிச்சப்படுத்துபவை. ஆனால் நம் அரசு விதிக்கும் வரியெனும் கொக்கியில் மாட்டிக் கொண்டுள்ள இக் குளிர்சாதன கருவிகள் இன்னும் பெரும்பாலான மக்களுக்கு எட்டாக்கனிகள்தானே! —நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுவிஸ் வங்கிக் கணக்கு ரகசியமானதா?



சுவிஸ் வங்கிகளில் இந்தியர்கள் போட்டுள்ள பணம் ரூ 13,0 கோடி. இதில் பெரும்பகுதி கணக்குக் காண்பிக்கப்படாத கறுப்புப்பணமும், லஞ்சப்பணமுமாகும்; இந்தியாவின் பொருளாதாரத்தை இது மோசமாகப் பாதிப்பதாகும்; இந்திய மக்களை வஞ்சிப்பதாகும். எனவே-

நமது ராஜ்ய சபையில் சென்ற ஆண்டு ஓர் உறுப்பினர் கேட்டார்: "பிலிப்பைன்சில் அதிபர் அக்வினோ செய்தது போல இந்திய அரசும் சட்ட விரோத பணத்தையெல்லாம் கைப்பற்ற நடவடிக்கை எடுக்குமா?" இதற்கு ராஜீவ் காந்தி "திருமதி அக்வினோ எப்படி இதனைச் செய்தார் என்று ஆய்ந்து, நமது சொந்த முறையில் இந்தப் பணங்களைப் பறிமுதல் செய்வோம்" என்று அறிவித்தார்.

ஆனால் ஓராண்டு ஆகியும், மிகவும் தேவையான இந்தப் பொருளாதார நடவடிக்கையைத் திருவாளர் பரிசுத்தம் ஏன் எடுக்க வில்லை? நாம் நினைப்பது போல சுவிஸ் வங்கிக் கணக்குகள் ரகசியமானவையுமல்ல; அரசால் கைப்பற்ற முடியாதனவும் அல்ல.

"கறுப்புப் பணத்தை சுவிஸ் வங்கிகள் பெற்றுக் கொண்டு இரகசியமாகக் காப்பாற்றி வருகின்றன" என்று அவப்பெயர் பெருகியதன் விளைவாக சில சுய ஒழுங்கு சட்டங்களை இந்த வங்கிகள் ஏற்படுத்தியுள்ளன.

சுவிஸ் தேசிய வங்கிச் சட்டத்தின் 9-வது பிரிவு தெளிவாகச் சொல்கிறது "சுவிட்சர்லாந்திலோ, வெளிநாட்டிலோ வாடிக்கையாளர்கள், அதிகாரிகளை, சிறப்பாக வருமான வரி அதிகாரிகளைத் தவறான அல்லது அரைகுறையான தகவல்களைத் தந்து ஏமாற்றும் போது, வங்கிகள் அந்த முயற்சிக்கு உடந்தையாக இருக்க மாட்டா"

மேலும் அனைத்துலக குற்றவியல் துறையின் ஒருவருக்கொருவர் உதவும் சட்டமும தேவைப்பட்டால் சுவிஸ் வங்கிகளின் இரகசிய கணக்குகளைத் திறந்து பார்க்கவும், தொகையைப் பறிமுதல் செய்யவும் வழி செய்கிறது. சுவிஸ் வங்கியில் எண் கணக்கு (நம்பர் அக்கொளண்ட்) வைத்தால் யாரும் கண்டு பிடிக்க முடியாது என்பதும் சரியல்ல. மொத்தக் கணக்குகளில் இங்கு 10% மட்டுமே எண் கணக்குகள். ஏற்கனவே கணக்கு வைத்திருப்பவர்கள்தான் எண் கணக்கு வைக்க அனுமதிக்கப்படுவர். அதுவும் இரகசிய எண் கணக்கு வைத்திருக்க வேண்டியதன் காரணத்தை அறிந்து திருப்தியடைந்தால் மட்டும் வங்கி அதிகாரிகள் இதற்கு அனுமதிப்பர்.

அரசு நீர்மூழ்கிக் கப்பல் வாங்கியதில் ஏற்பட்ட ஊழலிம் சுவிஸ் வாங்கி தொடர்பு படுத்தப்பட்டுள்ளதே! இரகசிய வங்கிக் கணக்கைத் திறந்து உண்மையறிய என்ன தடை!

—அஞ்ஞானி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அமைச்சராவதற்குத் தகுதி என்ன?

ஒரு நாட்டு மன்னர் வேட்டையாடுவதற்குப் புறப்பட்டார். மன்னர் தம் அமைச்சரை அழைத்து, 'நான் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்கிறேனே, இன்று மழை பெய்யுமா?" என்று கேட்டார்.

"மன்னர் அவர்களே! இன்று மழை பெய்யாது. என் பேச்சை நம்பி வேட்டைக்குச் செல்லுங்கள்" என்று கூறினான் அமைச்சன்.

அதை நம்பி மன்னர் வேட்டைக்குப் புறப்பட்டார். மன்னர் காட்டை நெருங்கிக் கொண்டிருந்த சமயம், எதிரே ஒரு குடியானவன், கழுதைமீது அமர்ந்து வந்து கொண்டிருந்தான். மன்னன் அவனை நோக்கி, "என்ன குடியானவரே இன்று மழை பெய்யுமா?" கேட்டார்.

"இன்று நிச்சயமாக மழை பெய்யும். உடனே நீங்கள் திரும்பி விடுங்கள்" என்று பதிலளித்தான்.

அவன் பேச்சைப் பொருட்படுத்தாமல் மன்னர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார்.

சற்று தூரம் சென்றதும் கடும் மழை பெய்தது. அதனால் மன்னர் முழுமையாக நனைந்து விட்டார்.

அரண்மனைக்கு வந்த மன்னர் அமைச்சரை விலக்கிவிட்டு குடியானவனை அமைச்சராக்கினார். பின்னர் ஒரு நாள் "மழை பெய்யும் என்று அவ்வளவு உறுதியாகக் கூறினீர்களே! உமக்கு அவ்வளவு திட்டமாக எவ்வாறு தெரிந்தது?" என்று மன்னர் குடியானவ அமைச்சரைக் கேட்டார்.


அதற்குப் புது அமைச்சர் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார்: "மழை பெய்யுமா, பெய்யாத என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும். கழுதை தன் காதுகளை முன் பக்கமாக நீட்டிக் கொண்டால் மழை பெய்யும் என்றும் உண்மையை நான் அறிந்து கொள்வேன்."

உடனே மன்னன் இந்த அமைச்சரையும் பதவியிலிருந்து விலக்கிவிட்டுக் குடியானவனுடைய கழுதையை நாட்டின் அமைச்சராக்கினான்!


## சுட்டி இலவசம்

சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.


FREE E - BOOKS , www.thamizham.net.,



# உலகச் சந்தையில் இந்தியப் பொருட்கள்

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னால், உலகச் சந்தையில் நம் பொருட்களின் விற்பனை பங்கு 2% மட்டுமே. சுதந்திரத்திற்குப்பின் இந்தியா இந்தப் பங்கைப் பல மடங்கு பெருக்குமென மார்தட்டினோம்.

இப்போது உலகச் சந்தையில் நம் பொருட்களின் விற்பனைப் பங்கு 1% கூட இல்லை; 0·48% தான் என்பது படுகேவலத்திற்குரியது. இதற்கு காரணம், வருமாறு:

1. எந்தப் பொருளின் தயாரிப்பிலும் அரசு அளவுக்கு அதிகமாகத் தலையிடுவதுடன், தயாரிப்பு அனுமதி வழங்க ஆயிரம் தடைகளை விதித்து தயாரிப்பாளர்களை இழுத்தடிக்கிறது. இதனால் இந்த அனுமதிகளைப் பெற ஆங்காங்கே கடுமையாக லஞ்சம் தரவேண்டியுள்ளது. ஒரு சிறு தொழில் உற்பத்தியாளர் 40 வெவ்வேறு அரசு அமைப்புகளையும் அதற்குமேல் உற்பத்தியானதை ஏற்றுமதி செய்ய வேண்டுமாயினும் மேலும் 20 அரசு தடங்கல்களையும் கடக்க வேண்டும். இதனால் ஏற்படும் லஞ்சச் செலவு பொருள் மேல் வீழ்கிறது.

2 தயாரிப்புக்குத் தேவையான இரும்பு, 3 மடங்கும், மின்சாரம், பெட்ரோலியம் இவை 6 மடங்கும் உலக நாடுகளைவிட இங்கு விலை அதிகம். அடிக்கடி ஏற்படும் மின்தடை உற்பத்தியாளர்களின் கழுத்தை நெறிக்கிறது. மாற்று மின் உற்பத்திச்செலவு மிகவும் அதிகரித்து பொருள் விலையைக் கூட்டுகிறது.

3 பொருள்களின் மேல் மிக அதிகமாக வரிபோடும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. உள்நாட்டு எந்திரத்தில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு 15%ம் இறக்குமதி எந்திரத்தில் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு 85%ம் உள்நாட்டு வரி விதிக்கிறார்கள். இந்திய வங்கிகளிடம் கடன் வாங்கினால் அவை 17½% முதல் 22% வரை வட்டி கேட்கின்றன, உலகத்திலேயே மிக அதிக வட்டி வாங்கும் வங்கிகள் நம்முடையவை தாம்.

4. மற்ற மூலப் பொருட்களின் விலை அத்தனையும் அதிகமாய் இருக்க தொழிலாளர்கள் கூலி மட்டும் மிகக்குறைவாக உள்ளது. இதன் விளைவாக தொழிலாளர் போராட்டங்கள் தவிர்க்கமுடியாமல் இருக்கின்றன. 15,000 தொழிலாளர்கள் கொரியாவில் 9 மில்லியன் டன் எஃகு தயாரிக்கும்போது இங்கு 1·25 லட்சம் பேர்ககள், 6 மில்லியன் டன் மட்டுமே தயாரிக்கின்றனர், நவீனபடுத்தாமை, சிக்கனமின்மை, தொழிலாளர்களை உற்சாகப்படுத்தாமை இதற்குக் காரணமாகும், இதன் மொத்த விளைவாக யானை விலை விற்கும் இந்தியப் பொருட்களை உலகச்சந்தையில் யார் தீண்டுவார்கள் ?

— உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## புரட்சிப்புயல் கவிஞர் மு. மேத்தா

தமிழ்நாடு கவிஞர் பேரவை 'புரட்சிப்புயல்' என்ற பட்டத்தைப் பாடலாசிரியர் மு. மேத்தாவுக்குக் கொடுத்துள்ளது.

'இவர்தான் பாரதிதாசன் வாரிசு' என்றும் அந்த மேடை முழங்கியிருக்கிறது.

மேத்தா சினிமாவில் எழுதிய புரட்சிகரமான பாடல்களில் மாதிரிக்கு ஒன்று.

*மாமர்வுக்கு மயிலாப்பூரு டோய்*
*மாமிக்கந்த சித்திரக்குளம் டோய்*

இதை அந்தக் கூட்டத்தில் ஒதுக்குப்புறமாக உட்கார்ந்திருந்த ஒருவர் சொல்லிக் காட்டினார்.

நன்றி : திரைச்சுவை

---

## மனித முதலையை விழுங்கும் முதலை !

பல்கேரிய நாட்டு முதலைகள் ஆற்றங்கரையில் வெயிலில் உடலைக் காயவைத்துக் கொண்டிருந்தன

"எனக்குப் பசிக்கிறது. ஒரு சின்னக்குழந்தை கிடைத்தால் போதும்" என்றது முதல் முதலை.

" எனக்கு ரொம்ப பசி. ஒரு இளம்பெண் கிடைத்தால் நன்றாக இருக்கும்" என்றது இரண்டாவது முதலை.

" என்னுடைய பசிக்கு அரசியல்வாதிதான் கட்டுப்படியாகும்" என்றது மூன்றாவது முதலை.

" ஏன் ? ஏன்" என்று ஒரே சமயத்தில் மற்ற இரண்டு முதலைகளும் குரல் கொடுத்தன.

மூன்றாவது முதலை சொன்னது :

"சுவையாக, தடிப்பாக, முதுகெலும்பு இலலாமல் சாப்பிட சுலபமாக இருக்கும்!"

- மனயன்

---


வேல் டைப் பௌண்டரி

ஃ புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
ஃ எல்லா மொழி அச்செழுத்துக்கள்
ஃ எல்லாவித அச்சக உபகரணங்கள்
ஃ போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு,
பெருமாள்பேட்டை, சென்னை-7,
தொ. பேசி. 33420


FREE E - BOOKS , www.thamizham.net.,

Regd. No. TN/MS(N) 317

# பதில்கள்

**அகிம்சைப் பற்றிய உங்கள் கருத்தென்ன ?**

பாலகங்காதர திலகர் : அகிம்சைக்குரிய இடம் தனி மனித வாழ்க்கை. பிரத்தியட்ச உலகில் அகிம்சை நடக்கக்கூடிய காரியம் அன்று.

**கோழைத்தனத்திற்கும் வன்முறைக்கும் மத்தியில் ஒரு தெரிவு இருக்குமானல் நீங்கள் எதனை ஆதரிப்பீர்கள் ?**

காந்தியடிகள் : வன்முறையையே ஆதரிப்பேன். ஓர் இனம் முற்றாக நசுக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு இருப்பதை விட நான் ஆயிரம் தடவைகள் வன்முறையையே விரும்புவேன். அவமானத்தின் இழிவான சாட்சியாக இருப்பதைவிட கௌரத்தைக் காப்பாற்ற நான் ஆயுதமேந்தவும் தயார்.

**அடுத்து, அடுத்து, அடுத்து துன்பங்கள் வந்தாலும் மனம் சலிக்கக்கூடாது. அத்தகைய துன்பங்களுக்கு உதாரணம் தாருங்கள் ?**

தனிப்பாடல் :

ஆ ஈன மழை ஒழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய் நோவ அடிமை சாக
மா ஈரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன்காரன் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்றத்
தள்ளவொனா விருந்துவர சர்ப்பம்தீண்ட
கோவேந்தர் உழுதுண்ட கடனைக் கேட்க
குருக்கள் வந்து தட்சணைகள் கொடு என்றாரே.

**கோபப்படுவது எல்லோருக்கும் எளிதா ?**

அரிஸ்டாடில் : கோபப்படுவது எவருக்கும் எளிது தான். ஆனால் சரியான நபரிடம், சரியான அளவில் சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக, சரியான முறையில் கோபப்படுவதுதான் எல்லோர் கையிலும் இல்லை. அப்படிக் கோபப்படுவது எளிதாகவும் இல்லை.

சுட்டி

தொடர்பு முகவரி:
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை-600 040

சுட்டி ஆண்டுச் சந்தா: ரூ. 10
ஆயுள் சந்தா: ரூ. 150

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்நூல்கள்
FREE E - BOOKS , www.thamizham.net.,